பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

மங்கையரின் அங்கமெல்லாம்
தங்க நகைகளால் மின்னிப்
பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1870)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 13 வியாழக்கிழமை 26-04-2001 தொலைபேசி: 3378 ஒலி: 127

### அக்கினிச் சுவாலை - 1 ஆரம்பம்

# படையினருடன் புலிகள் கிளாலியில் பெரும் மோதல்

## 32 படையினர் பலி; 184 பேர் காயம்

(நமது சிறப்பு நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது நான்கு மாதகாலயுத்த நிறுத்தத்தை மேலும் நீடிப்பதில்லை என்று அறிவித்த கையோடு இராணுவத்தினரால் 'அக்கினிச் சுவாலை 1' படை நடவடிக்கையை நேற்று அதிகாலை ஆரம்பித்த போது விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடும் சமர் வெடித்தது.

இச் சம்பவத்தின் போது இரண்டு இராணுவ அதிகாரிகள் உட்பட 32 இராணுவத்தினர் பலியானதாகவும், 184 இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்னா தெரிவித்துள்ளார். இப் படை நடவடிக்கை கிளாலி மற்றும் எழுதுமட்டுவாழ், நாகர் கோயில் பகுதிகளில் இருந்து ஆனையிறவைக் கைப்பற்றும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் ''ஓயாத அலைகள்'' மூலம் கைப்பற்றியிருந்த ஆனையிறவுப் பெருந்தளத்தை மீண்டும் கைப்பற்றும் நோக்கோடு நேற்று அதிகாலை 5.30மணி முதல் அக்கினிச்சுவாலை 1 என்ற பெயரில் தொடர்இராணுவ நடவடிக்கை ஒன்றை படையினர் ஆரம்பித்துள்ளனர்.

இராணுவத்தின் பெரும்

→ 8ஆம் பக்கம் பார்க்க

### ஊழியர்கள பகிஷ்கரிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்களை ஏற்றி இறக்கும் பத்து லொறிகளை நேற்றுமுன்தினமிரவு இராணுவத்தினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

நேற்று அதிகாலை ஆரம்பித்த இராணுவ நடவடிக்கைக்கு படையினரை ஏற்றியிறக்கப்பயன்படுத்தவே மேற்படி லொறிகள் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## வன்னிசென்ற ஆயர்கள் குழு சு. ப. தமிழ்ச்செல்வனை சந்தித்தனர்

(மல்லாவி)

இலங்கையின் 10 கத்தோலிக்க மறை மாவட்ட ஆயர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்த் துறைப் பொறுப்பாளர் சு ப. தமிழ்ச்செல்வனை நேற்றுக்காலை 10மணியளவில் மல்லாவியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விடயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு கொழும்பு மறை மாவட்ட ஆயர் நிக்கலஸ் மார்க்கன் பெர்னாண்டோ தலைமையில்இவ் ஆயர்குழு சென்றிருந்ததுமுதலில் மன்னார் திருப்பதிப் பகுதிக்கு சென்ற ஆயர்கள் மதவழிபாடுகளை முடித்துக் கொண்டு விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்திப்பதற்கு நேற்றுக் காலை மல்லாவி போய்ச் சேர்ந்தனர்.

மல்லாவி சென்ற ஆயர்குழு அங்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்த் துறைப் பொறுப்பாளர் சு ப தமிழ்ச்செல்வனைச்சந்தித்துஇரண்டு மணித்தியாலம் வரை உரையாடியுள்ளனர்.

இந்த ஆயர்குழுவில் இரத்தினபுரி பேராயர் மல்கம் ரஞ்சித் அனுராதபுரம் ஆயர் ஒஸ்வோல்ட்கோமஸ், சிலாபம் ஆயர் பிரான்ஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ கண்டி ஆயர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு மாநகரில் அம்புலன்ஸ் ஓட்டம்

நேற்று நள்ளிரவு முதல் ''அக்கினிச்சுவலை1'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே இடம் பெற்ற மோதலின் போது படுகாயமடைந்த படையினரை விமானமூலம் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து இரத்மலானை விமான நிலையத்திற்கும் தேசிய வைத்திய சாலைக்குமிடையே இராணுவ மற்றும் வைத்தியசாலை அம்புலன்ஸ்கள் அடிக்கடி ஓடிய வண்ணம் இருந்ததாகவும் இதன்போது

8ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு ஜனாதிபதி மாவத்தையில் குண்டுவெடிப்பு ஒருவர் காயம்

### தேடுதலில் மற்றொரு குண்டு மீட்பு

(கொழும்பு)

கொழும்பு ஜனாதிபதி மாவத்தையில் மத்தியவங்கிக் கட்டடத்தில்நேற்றுக் காலை கைக்குண்டொன்று வெடித்துள்ளது.

நேற்றுக் காலை மேற்படி சட்டடத் தொகுதியை பாதுகாப்புபடையினர் சோதனையிட்டுக் கொண்டிருந்த சமயமே இக் குண்டு வெடிப்பு இடம்பெற்றது. இதனால் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சாஜன் ஒருவர் படுகாய மடைதுள்ளார்.

ஏற்கனவேகட்டடத்தில்வைக்கப்பட்டிருந்த குண்டுவெடித்ததா அல்லது வேறு ஏதாவது வகையில் கொண்டுவரப்பட்ட குண்டு வெடித்ததா என ஆராய்வதில் புலனாய்வுத் துறையினரும் படையினரும் கூட்டாக விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் கொழும்பு மாநகரிலும் அதன் சுற்றுப் புற களி

→ 8ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ அரண்கள் மீது மோட்டார் தாக்குதல்!

தென்மராட்சிப் பகுதியில் முகமாலை, கிளாலிப் பகுதிகளிலும் வடமராட்சிப் நாகர்கோவில் பகுதிகளிலும் உள்ள இராணுவ முன்னரங்கக் காவல் நிலைகளை நோக்கி விடுதலைப்புலிகள் மோட்டார்த் தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல்களின் போது இருபதிற்கும் அதிகமான இராணுவத்தினர் காயமடைந்திருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக செய்தி ஏஜன்சி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. [ம]

## கொழும்பு குண்டு வெடிப்பு இரு சந்தேக நபர்கள்கைது

(கொழும்பு)

கொழும்பு ஜனாதிபதி மாளிகைக்கு அருகேயுள்ள கட்டிடத் தொகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இரு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் தீவிர விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அதுடன் கட்டிடத் தொகுதியின் காவலாளிகள் இருவரும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து புறக்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# ஆட்சியை சிங்களவரிடம் ஒப்படைத்ததன் மூலம் பிரித்தானியா தமிழருக்கு துரோகம் இழைத்தது!

### கலாநிதி ஜெபநேசன் ஆயர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கையைக் காலனித்துவ நாடாக்கி ஆட்சிசெலுத்திய பிரித்தானிய அரசு சுதந்திர இலங்கையை சிங்கள மக்களிடம் ஒப்படைத்து தமிழ் மக்களுக்கு மாபெரும் துரோகம் புரிந்தது. இவ்வாறுதென்னிந்தியதிருச்சபை ஆயர் மேதகு கலாநிதி ஜெபநேசன் பிரித்தானிய அரசாங்கத்தை குற்றம் சாட்டியுள்ளார்.

தந்தை செல்வாவின் நூற்றாண்டு நினைவு நாள் நேற்று யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் பதில் துணைவேந்தர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடந்தது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் உரிமையில் அவர்களது சுதந்திரத்தில் பிரித்தானிய அரசுக்கு பெரும் தார்மீகப் பொறுப்புள்ளது. இதிலிருந்து பிரித்தானியா நழுவக்கூடாது. தமிழ் மக்களாகிய நாம் இவ்விடயத்தில் மிகவிழிப்பாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நிகழ்விற்குத் தலைமை வகித்து உரையாற்றிய பேரா

→ 8ஆம் பக்கம் பார்க்க

### ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

நாகர் கோவில் பகுதியில் இராணுவத்தினரின் வலிந்த தாக்குதலின்போது வீரவேங்கை கடலமுதன் [சிங்கன்பெருமாள்-மட்டக்களப்பு] என்ற போராளி உயிரிழந்துள்ளதாக புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு அறிவித்தது. (ம)

# மக்கள் வங்கி
# மகிழ்வுடன் அறிமுகப்படுத்தும்

## உங்கள் தேவைகளை நிறைவு செய்ய
## எங்கள் சேவைகள்

★ நடைமுறைக் கணக்குகள்
★ ஜனஜய சேமிப்புக் கணக்குகள்
★ சிசு உதான சேமிப்புக் கணக்குகள்
★ இசுறு உதான சேமிப்புக் கணக்குகள்
★ வனிதா வாசனா சேமிப்புக் கணக்குகள்
★ யாத்திரீகர்கள் கணக்குகள்
★ முதலீட்டு சேமிப்புக் கணக்குகள்
★ வதிவற்றோர் நாணயக் கணக்குகள்
★ வதிவுள்ளோர் நாணயக் கணக்குகள்
★ சேமிப்புக் கணக்குகள்
★ நிலையான வைப்புக்கள்
★ வெளிநாட்டு நாணய மாற்றல்கள்
★ வர்த்தகர்களுக்கான கடன் திட்டங்கள்
★ ஆசிரியர்களுக்கான கடன் திட்டங்கள்
★ தனியார் அரச கூட்டுஸ்தாபன ஊழியர்களுக்கான கடன்கள்
★ பிரதேச சபை ஊழியர்களுக்கான கடன்கள்
★ வீடமைப்புக் கடன்கள்
★ சுய தொழில் ஊக்குவிப்புக் கடன்கள்
★ வரையறையற்ற அடமானக் கடன்கள்
★ நகை அடைவு கடன்கள்
★ தற்காலிக மேலதிகப்பற்றுக்கள்
★ உத்தரவாதக் கடிதங்கள்
★ நாணயக் கடிதங்கள்

## நாடளாவிய தொலை நகல் பண மாற்றங்கள்

# மக்கள் மனமறிந்த வங்கி

PEOPLE'S BANK

# மக்கள் வங்கி

(கி-1879)

# குறுகியகால போரோய்வில் நிலவிய அமைதியானது
# சமாதான வாழ்வின் உன்னதத்தை உணர்த்திச்சென்றுள்ளது

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் கலாநிதி ஜெகான் பெரேரா 20.4.2001 அன்று வஸ்த்தியன் ஹோட்டலில் வைத்து 'வலம்புரிக்கு' வழங்கிய பிரத்தியேக பேட்டியின் தமிழ் மொழிபெயர்ப்பு இங்கு பிரசுரமாகிறது. (ஆ.ர்)

செவ்விகண்டவர்;
**ரீ. ரீ. மயூ**

சமாதானப் பேரவையினர் யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்த வஸ்த்தியன் விடுதிக்கு காலை 7.30மணிக்குச் சென்றபோது பேரவையின்தலைவர் ஜெகான் பெரேரா குறித்த நேரத்திற்குப் பேட்டி அளிக்க ஆர்வமாகவும், ஆயத்தமாகவும் இருந்ததால் செவ்வி உடனேயே ஆரம்பமானது.

வணக்கம்

வணக்கம்

**★ வலம்புரி:**
யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் தினசரிப் பத்திரிகையான வலம்புரியிலிருந்து வருகிறேன். தாங்கள் 1989 நவம்பரில் சுவீடன் நாட்டு, சிக்ருணவில் நடைபெற்றபூசல் ஒழிப்பு மாநாடு தொடக்கம் எத்தனையோ மாநாடுகளில் பங்கு பற்றி, சமாதானப் பிரசார முயற்சிகளில் நீண்ட கால அனுபவத்தைப் பெற்றிருக்கிறீர்கள். சமாதானத்துக்காகப் போராடும் தங்களின் தேசிய சமாதானப் பேரவை தற்போதுயாழ்ப்பாணம் வந்ததன் நோக்கம் என்ன?

**● ஜெகான் பெரேரா:**
நீங்கள் கூறுவதுசரிகொழும்பில் இருக்கும் போதுநாம்இங்குள்ள நிலை பற்றி அறியமுடியாது. கொழும்புச்செய்தியூடகங்களின் நிருபர்களும் இங்கு வருவது மிகக் குறைவு, வந்தாலும் சில மணி நேரங்களில் திரும்பிச் சென்று விடுவார்கள். எம்முடன் வந்த பத்திரிகையாளர்கள் ஐந்து நாட்கள் இங்கு தங்கி இருந்து குடிசார் குழுக்களைச் சந்தித்து அவர்களுடன் உரையாடி உண்மையான நிலைபற்றி அறிந்து தென்பகுதியினருக்கு விளக்க வைப்பதே எம் நோக்கம் ஆகும்.

யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு பிரதேசங்களுக்குச் சென்றுபல்வேறுகுழுக்களைச் சந்தித்து நிலைமைகளை நேரில் கண்டறிந்தோம். இது சாதாரணபத்திரிகையாளரது குறிக்கோளே. ஆனால் எமக்கு இன்னுமொரு முக்கிய குறிக்கோள இருக்கிறது. இங்குள்ள மக்களின் மன நிலையை அறிந்து தென்பகுதியினருக்கு விளக்கும் அதேவேளை இங்குள்ளவர்களுக்கு தென்பகுதி மக்களின் அபிப்பிராயத்தை நேரில் கூறி பல ஐயங்களைப் போக்குவதுடன் தரலாம் என்று எண்ணியே இங்கு வந்தோம்.

**★ வலம்புரி**
தாங்கள் இங்கு தங்கி இருக்கும் நாட்களில்நகரப்பிரமுகர்கள், மதத்தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், தனிப்பட்ட வெவ்வேறு குழுக்கள் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளஎன்போரைச் சந்தித்துள்ளீர்கள். தங்கள் மனப்பதிவின் படி இங்குள்ள கள நிலை எப்படி இருக்கிறது?.. (சமூக, பொருளாதார, அரசியல்கள நிலையைக் குறிப்பிடுகிறேன்..)

**● ஜெ.பெ:**
யாழ்ப்பாணத்துக்கு வரும் எவருக்கும் முதலில் மனதில் பதிவது இங்குள்ள மாபெரும் அழிவே இது ஒரு பெரும் யுத்தம் என்பதை உணராதவர்கள் மிகப் பெரிய பிழை விடுகிறார்கள். வீடுகள், கட்டடங்கள்முழு அளவில் அழிந்து போயுள்ள போர்க்கள நிலையையே காண்கிறேன் இக்கொடிய யுத்தத்தால் இறந்தோர்களை காணமுடியாது. அவர்கள் எரிக்கப்பட்டோ அல்லது புதைக்கப்பட்டோ இருப்பார்கள். இந்த உயிர் அழிவுகளை என்னால் உணரக் கூடியதாக உள்ளது. இது ஒரு முழு அளவிலான போர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இருக்கின்ற கட்டடங்களும் பராமரிப்பின்றி சிதைவுகளின்சின்னங்களுடன் நிற்கின்றன. எங்கும் நிலையியல் பண்பையேகாண்கிறேன் இயங்கியல்ப் போக்கையோ முன்னேற்றத்தையோபார்க்க முடியவில்லை. பஸ் நிலையத்தில் பஸ்கள் இருக்கின்றன; கடைகளில் வர்த்தகம் நடக்கின்றன. ஏதோ சுமாரான இயல்பு நிலையேபுலப்படுகின்றது. ஆனால் இந்த இயல்பு நிலைவழக்கமான, சமாதான கால இயல்பு நிலையல்ல. ஏனென்றால் யாழ்ப்பாணத்தில்முழுமையானசமாதானம் நிலவினால் அது குறைந்தது கண்டி நகரின் தோற்றத்திலாவது இருக்க வேண்டும். இது ஒரு செழிப்பு மிக்க முன்னேறிய நகரமாக ஒரு காலத்தில் இருந்ததை நானறிவேன். இப்போது செல்வச் செழிப்பின் அடையாளமே இலலை. ஒரு அமைதி காணபபட்டாலும் அது போரின் மத்தியிலுள்ள சிறு ஓய்வு நிலை அதாவது புயலின் முன்பின்னுள்ளஅமைதியையே காட்டுகிறது.

அடுத்து குடிசார் குழுக்களைச் சந்தித்தால் ஏற்பட்ட உணர்வுகளுக்கு வருவோம். இங்கு எல்லோருமே சமாதானத்தை எதிர்பார்ப்பதை அறிய முடிகிறது. அந்தச் சூழலை அனுபவிக்க ஆவலாக இருக்கிறார்கள். அதற்கு காரணம் கடந்த நான்குமாதமாக இங்கு அனுபவித்த போர் நிறுத்தமாக இருக்கலாம், கடும் போரின் அனுபவத்துடன் ஒப்பிடும்போது இக் குறுகிய கால அமைதி அவர்களுக்கு தற்காலப் போரின் கொடுமையையும், அஹிம்சையின் மகிமையையும் தெட்டத் தெளிவாகக்காட்டியுள்ளது.

இரண்டாவது முக்கியமான அனுபவம், இங்கு மக்கள் விடுதலைப் புலிகளின் உடன்பாடு சமாதானத்துக்கு அவசியமானது என்பதை ஐயமற உணர்கிறார்கள். இந்த உண்மை வடக்கு-கிழக்குமக்களுக்கு உள்ளங்கை நெல்லிக் கனி போல தெளிவாகத் தெரிகிறது. ஆனால் தென்னிலங்கை மக்களுக்கு இது பற்றித் தெளிவாகப் புரிய வில்லை. விடுதலைப்புலிகள் தமிழ்ஈழம் அல்லாத வேறு எதனையும் ஏற்க மாட்டார்கள் என்று எண்ணுவதாலோ என்னவோ அவர்கள் விடுதலைப்புலிகளை வெளியே வைத்துக் கொண்டு தீர்வு யோசனைகளைச் செய்ய வேண்டும் என்று கருதுகிறார்கள். ஆனால் இங்கு நாம் சந்தித்த அனைத்துக் குழுக்களும் விடுதலைப்புலிகள் இல்லாமல் தீர்வினை எட்டமுடியாதென்றே நம்புகின்றனர். முக்கியமான சில குழுக்கள், விசேடமாக சமாதானம், நன்னம்பிக்கைக்காக உழைக்கும் அமைப்புக்கள் தமிழர்களின் உரிமையைப் பெறுவதில் விடுதலைப்புலிகளை முக்கிய அம்சமாகக் கருதுகிறார்கள். இவ்உரிமைகளை ஒரு அரசியல் தீர்வின் மூலமே அடைய வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியுடன் இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

**★ வலம்புரி:**
தாங்கள் பற்பல சமாதான மாநாடுகளில் பங்குபற்றியிருக்கிறீர்கள் தங்கள் அனுபவத்தைக்கொண்டு இங்குள்ள சமாதானப் பாதையின் வெற்றிகுறித்து என்ன நினைக்கிறீர்கள்?

**● ஜெ. பெ.**
நான் நினைக்கின்றேன் சமாதானம் பற்றிய நம்பிக்கை இப்போது அடிவானத்தில் தோன்றியுள்ளது. அதற்குக் காரணம விடுதலைபபுலிகளின் தொடர்ச்சியான நான்குமாத போர் நிறுத்தம் ஆகும. பிரிட்டனின் தடையை தடுப்பதற்கே அவர்கள் போர்நிறுத்தம் செய்தார்கள் என்று முதலில் எல்லோரும் கருதினார்கள். ஆனால் அதன்பின்னும் அவர்கள தொடர்ச்சியாக யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு வருவது சமாதானம் மீது அவர்கள் காட்டும் ஆர்வத்தைப் புலப்படுத்துகிறது.

இது ஒரு முககியமான போக்கு. இதுவரை போரின் மூலம் தமிழ்மக்களின் குறிக்கோளை அடையவேண்டும் என நம்பிய விடுதலைப்புலிகள் இப்போது அரசியல் தீர்வின்மூலம் அவற்றைப் பெறலாமஎன நினைப்பது ஒரு முன்னேற்றமான அம்சம. விடுதலைபபுலிகள் தமது கேந்திரிய உபாயத்தை போர்க்களத்திலிருந்து அரசியல்க் களத்திற்கு மாற்றி இருப்பது ஒரு முக்கியமான திருப்பம்.

போரின் மறுபுறத்தில் அரசின் போக்கை கவனித்தால் அது அடிக்கடி கூறிவருவது 'அரசியல் தீர்வே இறுதிமுடிவென்று' அதனை நான் நம்புகிறேன். அரசு இராணுவத் தீர்வு, அரசியல்தீர்வு என்ற இரண்டு தீர்வுகளை கையில் தாங்கியுள்ள போதும் இறுதி முடிவை அரசியல் தீர்வின்மூலமே பெறலாம் என உணர்கின்றது.

எனினும் விடுதலைப்புலிகள் பக்கம் ஏற்பட்டுள்ள முக்கியமான மாற்றம் அரசாங்கம் பக்கம் ஏற்படவில்லை. அரசாங்கம் இன்னும் சந்தேகம் தீராத நிலையிலேயே உள்ளது. அதனால் அது மிக மிக ஆறுதலாகவே சமாதானப் பாதைக்கு ஊர்ந்து வருகிறது அரசாங்கத்துக்குள இரண்டு குழுக்கள இருக்கிறது. ஒரு குழு இராணுவத் தீர்வை விரும்புகிறது மற்றைய குழு அரசியல் தீர்வை விரும்புகிறது.

இம் மாறுபட்ட நிலையே அரசாங்கத்தின் வேகமின்மைக்கு காரணம் என்று கருதுகிறேன். அரசாங்கம அதிகாரப பரவலாககல முதலியவற்றின் மூலம விடுதலைப் புலிகள இல்லாமலே தீர்வை எட்ட முயலகிறது.

ஆனால் நோர்வேயின் தலையீட்டையடுதது இப்போது நிலைமை சறறு மாறிவருகின்றது.

சர்வதேச சமூகத்தின் வற்புறுத்தலும் சேர்ந்துள்ளது. நான் முன்பு கூறியதுபோல விடுதலைபபுலிகள போர்த் தந்திரோபாயத்துக்குப் பதிலாக அரசியல் சதுரங்கத்தை வெற்றியுடன் ஆடி தமது இலட்சியத்தை அரசியலின் மூலம் பெறும் போக்கை அனுசரிப்பது நம்பிக்கையைத் தருகிறது. இதுவே சமாதான வழிககுப்பலமாகவும் அமையும்.

(இதன்தொடர்ச்சி நாளைய வலம்புரியில்...)

யாழ்ப்பாணத்தில் முழுமையான சமாதானம் நில்வினால் அது குறைந்தது கண்டி நகரின் தோற்றத்திலாவது இருக்க வேண்டும். இது ஒரு செழிப்பு மிக்க முன்னேறிய நகரமாக ஒருகாலத்தில் இருந்ததை நானறிவேன். இப்போது செல்வச் செழிப்பின் அடையாளமே இல்லை. ஒரு அமைதி காணப்பட்டாலும் அது போரின் மத்தியிலும் சிறு ஓய்வுநிலை. அதாவது புயலின் முன், பின்னுள்ள அமைதியையே காட்டுகிறது

## தவறிவிட்டது

உடுவில், மல்வத்தையில் வசித்து வரும் திரு. ஞானமுத்து பெனடிக்ற் ஜெபரத்தினம் ஆகியநான் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ஆயுள் காப்புறுதி செய்து பெற்றுக் கொண்ட உரிமைப் பத்திரம்(Policy) இல. 2400492 கே. கே. எஸ். வீதியில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் வரும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்;

**பெனடிக்ற் ஜெபரத்தினம்**
கிராம சேவகர்
சங்குவேலி J- 187

(கி/ 1880)

## சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகப் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா 2001 ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றும் சகல மாணவர்களையும எதிர் வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை நிலையத்தில் சந்திக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுளளது.

பரீட்சை விண்ணபம் தொடர்பாக இச் சந்திப்பு இடம் பெறவுளளதால் தவறாது அனைவரையும் கலந்து கொளளுமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் கு. சண்முகநாதன் கேட்டுள்ளார். (உ)

## சமயபாட செயலமர்வு

(மந்திகை)

தென்மராட்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 8,11இல் சைவ சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 28ம் திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்பாட நெறியுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலய பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (உ-23)

## இராசி பலன்

26-4-2001
(சித்திரை 13, வியாழன்)
திருதியை மு. இ 7. 27 வரை
ரோகிணி ந. இ 3.46 வரை
ராகுகாலம 1. 29-2.59
நலலநேரம 7.29-8.59

**மேடம்**
தனவிரயம், வாக்குகலகம், முயற்சி தாமதம், மாதர் நட்பு.

**இடபம்**
பெரியோர் ஆசி, புதிய பொருள சேர்க்கை, போசன சுகம், காரியம கைகூடும்.

**மிதுனம்**
உணர்ச்சி வசப்படல், பிரயாண அலைச்சல், சுப செலவு, காரியதாமதம்.

**கடகம்**
காரியம் கைகூடும், தன லாபம், கீர்த்தி, மனமகிழ்ச்சி.

**சிங்கம்**
பணச்செலவு, தொழில் முன்னேற்றம், அதிகாரம், முயற்சிவெற்றி.

**கன்னி**
அதிகாரிகள் வெறுப்பு, கட்டுப்பாடு, அச்சமான நிலை, புதியதிட்டம்.

**துலாம்**
எதிர்பாராத அச்சம், வியாதி, முயற்சிதாமதம், சகோதரர் உதவி.

**விருச்சிகம்**
தனலாபம, வாகனசுகம், அபூர்வ சந்திப்பு; சுவாரஸ்யம.

**தனுசு**
ரோகம், முயற்சி விருத்தி, பகைவரால் நன்மை, காரியம் கைகூடும்.

**மகரம**
முயற்சி தாமதம், மதிப்புக் குறைவு, குடும்பககவலை, வியாபாரச்சிறப்பு.

**கும்பம**
பெரியோர் மதித்தல், உறவினர் மனஸ்தாபம, அற்பர் நேசம், மனசசஞ்சலம.

**மீனம்**
சகோதரர் உதவி, இனிய சம்பவம், பிரயாணம், காரிய நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப் பட்டது)
**வளவன்**

## மகாபாரதச் சொற் பொழிவு

[யாழ்ப்பாணம]

நீர்வேலிக கந்தசாமி ஆலய வருடாந்த உற்சவத்தைமுன்னிட்டு தினமும் பி.ப. 4.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை நித்தியானந்த சாமா; மகாபாரதச் சொற் பொழிவு நிகழ்த்துகின்றார். (செ)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் மீனாட்சி அச்சகத்திற்கு முன் பாகநாயன்மார் வீதியிலுள்ள இலக்கம் 43 வீடும், கடையும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி, நடராசா பத்திநாதன் 103/1 கோயில் வீதி நல்லூர். (ஜீ ரி.சற். இற்கு முன்பாக) அல்லது 'வலம்புரி' இல 15 வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம். (கி-1882)

### தவறிவிட்டது

நீர்வேலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஸ்ரீகாந்தன் என்பவருடைய 732933573V, 0903003250 இலக்க தேசிய, விசேட அடையாள அட்டைகள் 22-04-2001 அன்று திருநெல்வேலிக்கும் மூளாய்க்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள்வலம்புரி காரியாலயத்தில் கொடுத்துதவவும்.

(2944)

# பொருட்களை சூறையாடியோர் பொதுமக்களால் மடக்கிப் பிடிப்பு

(மந்திகை)

தென்மராட்சிப் பகுதிகளில் பொருட்களைத் திருடிக் கொண்டு வந்தவர்கள் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி மட்டுவில், நுணாவில், கைதடிப் பகுதியிலிருந்து பொருட்களைத் திருடி வந்தவர்கள் சிறுப்பிட்டி, பன்னாலைப் பகுதியில்வைத்து பொது மக்களால் மறிக்கப்பட்டு பின்னர் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

அப்பகுதிக்கு வந்த பொலிஸார் சம்பந்தப்பட்டவர்களிடம் தேங்காய், நெல்லுமூடைகள், அலுமாரிகள், பாத்திரங்கள், மின்சார உபகரணங்கள் போன்றவற்றைபறி முதல் செய்ததுடன் அவர்களின் அடையாள அட்டைகளை, பதிவு செய்தபின்விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பொருட்களை உரியவர்கள் அடையாளம் காட்டி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (உ-23)

## மணவாளக் கோலம்

(மந்திகை)

அல்வாய் கிழக்கு பெருங்கலட்டி தில்லையம்பல பிள்ளையார் கோவில் மணவாள கோல விழா எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசேட அபிடேக ஆராதனையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பூசைகள் நடைபெறும். (உ-23)

# சிறுபான்மையினரின்உரிமையினை ஊடகங்கள் இழிவு படுத்துகின்றன

(கொழும்பு)

இலங்கை வாழ் சிறுபான்மையினரின் உரிமைக்குரலை ஊடகங்கள் மலினப்படுத்துகின்றன என உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினரும் எமது சகோதரர்களே எனச் சிந்திக்காது பொறுப்பற்ற விதத்தில் சில செய்தி ஊடகங்கள் செயற்படுகின்றன.

ஊடகங்களின் இத்தகைய செயற்பாடு வேதனைக்குரியதாகும். சிறுபான்மையினரின் தேவைகளையும் உரிமைகளையும் வென்றெடுப்பதற்கு கடினப் போக்கை கடைப்பிடிக்கத் தேவையில்லை.

மென்மையான போக்கைக் கொண்டாலே போதுமானதாகும். இது எமக்கு வெற்றிவாய்ப்பைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

ஊடகங்கள் சிறுபான்மை மக்களின் உரிமைகளையும், அபிலாஷைகளையும் புரிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# செய்தித் துளிகள்

## பெயர் மாற்றம்

(சுண்டுக்குளி)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் எவ் எ கிண்ணப்போட்டிகள் என்ற பெயரால் நடத்தப்பட்டு வந்த போட்டிகள் இனிமேல் சாப் எவ். எ கிண்ணப்போட்டிகள் என்ற பெயரில் நடத்தப்படவுள்ளதாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பலதரப்பட்ட விளையாட்டு நிகழ்ச்சிகளை, ஊககுவிப்பதில், முன்னணியில நிற்கும் பிறவுண் அன்ட் கமபனி லிமிரட் 30 இலட்சம் ரூபாவை உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு வழங்க முன் வந்ததை அடுத்தே இம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (உ-110)

## தந்தை செல்வா நினைவுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா நினைவு தினக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பி.ப2 30மணிக்கு அளவெட்டி மகாஜனா சபை மண்டபத்தில் பண்டிதர் க நாகலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நினைவுரைகளை, பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் யாழ். மாநகர முதல்வர் என். ரவிராஜ். யாழ். மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர்களான சி சிவமகாராசா, மாவை சேனாதிராசா மற்றும் பலர் நிகழ்த்துவர். (உ)

## கிபிர் குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான கிபிர் குண்டுவீச்சுவிமானங்கள் கடந்த செவ்வாயும் நேற்று முன்தினமும் யாழ் நகரப்பகுதியை சுற்றிவட்டமிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிபிர்ரககுண்டுவீச்சுவிமானங்கள் இரண்டுநேற்றுமுன்தினம் காலை பேரிரைச்சலுடன் குடாநாட்டைச் சுற்றி வட்டமிட்ட பின்னர் கல்முனைப் பகுதியை நோக்கி இரண்டு குண்டுகளை வீசியது. இக் குண்டுவீச்சின் போது ஏற்பட்ட சேதவிபரம் எதுவும் தெரியவரவில்லை. (ம-110)

## ஐக்கிய மே தினம்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பின் முயற்சியால் 12 தொழிற் சங்கங்கள் இணைந்து யாழ்ப்பாணத்தில் நாவலர் கலாசார மண்டபத்தில் மேதினத்தைக் கொண்டாட முடிவு செய்துள்ளன.

பல்கலைக் கழக ஊழியர் சங்கம், வடபிராந்தியஉப்பள சேவை நலச்சங்கம், இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம், கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் (லங்கா சீமெந்து கிளை), வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்க பொது (சிற்றூழியர்) சங்கம், நவலங்கா தொழிலாளர் சங்கம், உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம், இலங்கை கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், சீமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் ஆகியன இணைந்து மேதினத்தை கொண்டாடவுள்ளன. (உ)

## புதிய பயிற்றுநர்

(கொழும்பு)

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர் பறுறிச்சட்டை குறுகிய கால ஒப்பந்த அடிப்படையில் துடுப்பாட்டப் பயிற்றுனராக இலங்கைக்கு அழைப்பதற்கு கிரிக்கெட் கட்டுப்பாட்டு இடைக்கால நிர்வாக சபை தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் இலங்கைக்கான இந்திய அணியின் விஜயம் எதிர் வரும் யூலை மாதம் ஆரம்பமாவதற்கு முன்னர் அவர் இலங்கை வருவார் என நம்பப்படுகிறது. (உ-4)

## கொடுப்பனவு வழங்கப்பட்டது

(மந்திகை)

திக்கம் வடிசாலையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாக வடிசாலை பொது முகாமையாளர் பரஞ்சோதி ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (செ-23)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் வைபவம் நாளை வெள்ளிக்கிழமை பி. ப. 3மணியளவில் சுன்னாகப்பகுதி ஈ.பி டி. பி அமைப்பாளர் கே. கமலசேகரன் தலைமையில்சுன்னாகம் ஈ. பி. டி.பி. அலுவலகத்தில்நடைபெறுமெனமேற்படி பிரதேசசெயலகவிளையாட்டு உத்தியோகத்தர் பா.பாஸ்கரன் தெரிவித்துள்ளார். (உ- 2)

## பூரணம்பிள்ளை காலமானார்

(யாழ்ப்பாணம்)

ஹாட்லிக் கல்லூரி யாழ்ப்பாணம் பரியோவான்கல்லூரி ஆகியவற்றில் அதிபராக இருந்த பூரணம்பிள்ளை இலண்டனில் காலமானார்.

சிறந்த சமூக சேவையாளரும் கல்வியாளரும் விளையாட்டுத்துறை விற்பன்னருமான, இவர்இறக்கும்பொழுது 91 வயது.

இவரின் இறுதிக் கிரியைகள் இலண்டனில் இடம்பெறுமெனத் தெரியவருகிறது. [உ-து]

## விபத்தில் படுகாயம்

(மந்திகை)

மூத்தவிநாயகர் கோவிலடியில் மோட்டார் சைக்கில் லொறியுடன் மோதியதில் விபத்தில்படுகாயம் அடைந்த நிலையில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் துன்னாலைதெற்கைச்சேர்ந்த ஐ. தருமகுலசிங்கம் (வயது-38) என்பவரே படுகாயமடைந்தநிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-23)

## நிவாரணம்

(மந்திகை)

வடமராட்சிதெற்குமேற்கு பிரதேச செயலர் பிரிவில் சித்திரை மாத நிவாரண பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. (உ-23)

# கல்வியியற் கல்லூரி அபிவிருத்திக்கு ஒரு இலட்சம் நிதியுதவி

[மந்திகை]

யா/மாவட்ட கல்வியியற் கல்லூரியில் அபிவிருத்திக்கென ஒரு இலட்சம் ரூபாவை ஒதுக்குவதென அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் யா/மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி உறுதியளித்துள்ளார்.

கடந்த 19ஆம் திகதி கல்வியியற் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளைக் கண்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர், உரியவர்களுடன் கதைத்து அபிவிருத்திக்கு ஏற்ற நடவடிக்கை எடுப்பதென தெரிவித்தார். (உ-23)

# கள்வர் குழு தாக்கியதில் இளம் பெண் காயம்

(மந்திகை)

வீட்டில் இருந்தோரைத் தாக்கிவிட்டு அங்கிருந்த பொருட்களை சூறையாடிச் சென்ற சம்பவம் அண்மையில் கரவெட்டி இடைக்குறிச்சிப் பகுதியில்இடம்பெற்றுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் செல்வராசா சௌந்தினி (வயது 23) கோவிந்தன் செல்வராசா ஆகியோர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவத்தின் போது கழுத்துச் சங்கிலி, மற்றும் 10 ஆயிரம் ரூபா பணம் என்பன களவாடப்பட்டுள்ளன. (உ-23)

# தென்மராட்சியில் களவாடிய பொருட்கள் வாதரவத்தையில் மீட்பு

(மந்திகை)

தென்மராட்சிப் பகுதிகளிலுள்ள வீடுகளில் திருடப்பட்ட பொருட்கள் வாதரவத்தையில் மீட்கப்பட்டுள்ளன.

மட்டுவில்,நுணாவில், கைதடி பகுதியிலிருந்து திருடப் பட்ட பொருட்கள் இப்பகுதியில்இருப்பதாக பொது மக்கள் கொடுத்த முறைப்பாட்டையடுத்து அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் அதனை மீட்டனர்.

மீட்கப்பட்ட பொருட்கள் கோப்பாய்ப்பொலிஸ் நிலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. (உ-23)

# பொறுமைக்கும் எல்லை உண்டென்பதை புலிகள் நிரூபித்துள்ளனர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை நீடிப்பதில்லை என்று எடுத்த தீர்மானத்தின் விளைவாக ஏற்படக் கூடிய பாரதூரமான விளைவுகளுக்கும் அழிவுகளுக்கும் அரசே பொறுபபேறக வேண்டும்.

இவ்வாறு தமிழ்க் கட்சித் தலைவர்கள் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த அறிவிப்பை நீடிப்பதில்லை என்ற முடிவு குறித்துக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிப்பதில்லை என்று எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பின்னணியில் ஏற்படப்போகின்ற விளைவுகளையும், அழிவுகளையும் அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என்று ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி தெரிவித்துள்ளார்.

அகிலஇலங்கைத் தமிழ் காங்கிரசைச் சேர்ந்த கலாநிதி என் குமரகுருபரன் கருத்துத் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகள் மூன்று தடவைகள் யுத்த நிறுத்தத்தை நீடித்துள்ளனர். ஆனால், அரசு இதனை எதிர்த்து இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்தது இந்நிலையில் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை நீடிப்பார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது. பொறுமைக்கும் எல்லை உண்டு. இதன் விளைவுகளை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று கூறியுள்ளார். (வ)

## இன்று ஒரு தகவல்

# பாவத்தின் தாய் மதுதான்

ஒரு அராபியன் காட்டு வழியே தன்னந்தனியே சென்று கொண்டிருந்தான். திடீரென்று அவன் எதிரே சாத்தான் தோன்றினான். ''நான் செய்யச் சொல்லும் மூன்றுபாவங்களில் ஏதேனும் ஒரு பாவத்தைச் செய்ய வேண்டும். இல்லையேல் உன்னை இங்கேயே கொன்று விடுவேன்'' என்று மிரட்டினான் சாத்தான். ''என்ன பாவங்கள்'' என்று நடுங்கிக் கொண்டே கேட்டான் அராபியன்.

இன்னும் சிறிது நேரத்தில் ஒரு பெண் கைக் குழந்தையுடன் இங்கே வருவாள். நீ அந்தப் பெண்ணைக் கெடுக்க வேண்டும். இல்லையேல் அந்தக் குழந்தையைக் கொல்ல வேண்டும். இல்லாவிட்டால் என் கையிலிருக்கும் இந்த மதுவைக் குடிக்க வேண்டும் என்றான் சாத்தான். சிறிது நேரத்தில் சாத்தான் சொன்னபடியே ஓர் அழகான பெண் கைக்குழந்தையுடன் அங்கு வந்து சேர்ந்தாள்.

அராபியன் சிந்தித்தான் ''பெண்ணைக் கெடுப்பது பாவம். குழந்தையைக் கொல்வது அதைவிடப் பெரும் பாவம். ஆகவே, மதுவைக் குடித்து விடுவோம்'' என்று நினைத்துச் சாத்தானின் கையிலிருந்த மதுவை வாங்கிக் குடித்தான். மதுபோதையில் அறிவு மயங்கிய அவன் அந்தப் பெண்ணைக் கெடுத்தான். அப்பொழுது குழந்தை அழுதது. கோபத்தால் குழந்தையையும் தரையில் வீசிக் கொன்றான். எல்லாப் பாவங்களும் மதுவால் விளைந்தன.

பேராசிரியர் எ. சோதி

# 12மறை மாவட்ட ஆயர் குழுவினர் மடுத் திருப்பதிக்குச் சென்றனர்

(வவுனியா)

இலங்கையின் சகல பாகங்களிலும் உள்ள 12மறைமாவட்டஆயர்கள் வன்னிக்கான இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம்மடுபோய்ச் சேர்ந்துள்ளார்கள்.

இவ்ஆயர்குழு இரத்தினபுரி ஆயர் அதிவணக்கத்துக்குரிய மல்கம் ரஞ்சித் தலைமையில் வன்னி சென்றுள்ளது.

இரண்டுநாள் உத்தியோக விஜயத்தை மேற்கொண்டு வன்னி சென்ற ஆயர்குழுவினர் மடுமாதாதிருப்பதியில் சமயநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த ஆயர்குழுவினரை பறையனாங்குளம் இராணுவ சோதனைச்சவாடி ஊடாக பிரிகேடியர் ஜே டி அல்விஸ் வன்னிக்கு வழி அனுப்பிவைத்தார்.

வன்னிவிஜயம்தொடர்பாக இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் அதிவண மல்கம்ரஞ்சித் கருத்துத் தெரிவிக்கையில்

சமீபத்தில் மடுமாதா திருச்சொரூபம் தென்இலங்கைக்கு வந்து மக்கள் தரிசனத்தின் பின் திரும்பியுள்ளது. அதற்கு நாம்தான் நன்றிதெரிவிக்க வேண்டும் இதுதொடர்பான பாரம்பரிய வைபவம்ஒன்று உள்ளது அதற்காகவே மடுவிற்குச்செல்லத் திட்டமிட்டோம் என்றுதெரிவித்துள்ளார்.

மடுவில்உள்ள தமிழ் அகதிகளின் தேவைகளை அறிவதுடன் சந்தர்ப்பம் கிடைக்குமானல் விடுதலைப்புலிகளின் தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்துவோம் என்றும் ஆயர்தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த அறிவிப்புமுடிவடைந்த நிலையில் இவர்களின் வன்னிவிஜயம் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். [ம]

## வவுனியாவில் ஐவர் கைது

[கொழும்பு]

லண்டன் சண்டேரைம்ஸ் பெண் பத்திரிகையாளர் மேரி கத்தரின் இராணுவக் கட்டுப்பாடற்ற புலிகளின் பிரதேசத்திற்குச்சென்றமைதொடர்பாக ஐந்து பொதுமக்கள் வவுனியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஐவரும் பாவற்குளம் பகுதியைச் சேர்ந்தவர்களாவர். (வ)

## மட்டக்களப்பில் சோதனை தீவிரம்

[கொழும்பு]

கடந்த 4மாத காலமாக விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்திருந்த போர் நிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளதையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினரும், பொலிஸாரும சோதனைச் சாவடிகளில் தீவிர சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அங்கிருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன. [ந-4]

## கொழும்பில் சுற்றி வளைப்பு

(கொழும்பு)

கொழும்பின் பலபாகங்களிலும் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸார் மேற்கொண்ட இச் சோதனை நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை என்பதும்குறிப்பிடத்தக்கது. (ந-4)

## 115 பேருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(கொழும்பு)

குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு பின்னர் நீர் கொழும்புச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 115 பேரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீர் கொழும்புநீதவான் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளார். (ந-4)

## உதை பந்தாட்டம்

(சுண்டுக்குளி)

யாழ். மாவட்ட தெரிவு அணிக்கும் பாஷையூர் சென் அன்ரனிஸ் அணிக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற சினேகபூர்வ உதைபந்தாட்டத்தில், யாழ். தெரிவு அணி 5;0 என்ற கோல்கணக்கில் வெற்றி ஈட்டியுள்ளது.

இவ் ஆட்டத்துக்கு மத்தியஸ்தர்களாக ந. சுரேஸ், திருமாறன் தர் மகுலநாதன் ஆகியோர் கடமை யாற்றினார்கள். (உ-110)

## இந்திய மீனவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 இந்திய மீனவர்களும் கடந்த திங்கட்கிழமை யாழ். நீதிமன்றில் நீதவான் இ.விக்கினராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

விசாரணைகளின் முடிவில் மே மாதம் 4 ஆம் திகதி வரை இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றத்தின் பேரில் கச்சதீவுக் கடலில் வைத்து மேற்படி 8 மீனவர்களும் கடந்த 20 ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

## பெற்ற குழந்தைக்கு தீ வைத்த தந்தை

(கொழும்பு)

பெண் என்றால் பேயும் இரங்கும் என்னும் நிலை மாறி, பெற்ற தந்தையே தனது பெண் குழந்தையை தீயிட்டுக்கொழுத்தியசம்பவம் குருநாகலில் இடம்பெற்றுள்ளது.

குடும்பத்தகராறு காரணமாக ஒன்றரைவயது பச்சிளம் பாலகியைத் தந்தை தீயிட்டுக் கொழுத்தியமையினால் பலத்த எரிகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [செ]

## கோண்டாவில் வாசிக்கு 5 வருட கடூழியச் சிறை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கோண்டாவிலைச் சேர்ந்த மார்க்கண்டு சுதன் என்பவருக்கு யாழ் மாவட்ட நீதிபதி இ. விக்கினராஜா 5 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளார்,

கடந்த திங்கட்கிழமை யாழ்.சிறைச்சாலையில், சிறைச்சாலை அதிகாரி ஆ.சிவபாதசுந்தரம் முன்னிலையில் இடம்பெற்ற விசாரணைகளின் பின் மேற்படி தீர்ப்பை வழங்கிய நீநிபதி, மீண்டும் இவரை களுத்துறை சிறைச்சாலைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

மேற்படி நபர், யாழ்.சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட சமயம் மூன்று தடவைகள் தப்பியோடி பிடிபட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

## பதினாறு பேருக்கு விளக்கமறியல் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி, யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 பேர் நேற்றைய முன்தினம் யாழ். சிறைச்சாலை அதிகாரிகளால் யாழ். மாவட்ட நீதிபதி இவிக்கினராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கும்வரை எஸ் கிருபாகரன், எஸ். தயாபரன், எஸ். விஜயரூபன், ஆர். தயாகரன், எஸ் சொர்ணலிங்கம், எஸ்.சுதன், என் றேமன், எ.விமலதாஸ், கே சுஜிந்தன், என் நிமல், பி.சிவராசா, எஸ் சுபாகரன், வி ஜெயராஜா, ரி. யோகரதி. ஜே ஜெகாஸ் ஆகியோரை வரும் மாதம் 15 ஆம் திகதி வரையும்,

வி.தயாளினி என்பவரை இம்மாதம் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (உ-6)

## யுத்தநிறுத்தம் வாபஸ் நோர்வேயின்சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம வாபஸ் பெறப்பட்டமை நோர்வே அரசு மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு பெரியதொரு பின்னடைவை ஏற்படுத்துமென அரசியல் ஆய்வாளர்கள தெரிவித்துளளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் புலிகள் வைத்திருந்த ஆர்வத்தை அரசு கௌரவிக்கத் தவறியமையே யுத்த நிறுத்தம் வாபஸ் செய்யப்பட்டமைக்குக் காரணம் எனவும், அரசின் நிலைப்பாடு, ஆயுதப் போராட்டம் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற விடுதலைப் புலிகளின் உறுதிப்பாட்டிற்கு வலுவூட்டுவதாக அமைந்துள்ளதெனவும் ஆய்வாளர்கள கவலை வெளியிட்டுள்ளனர்

இதேவேளை,

சமாதான முயற்சிகளுக்கு உயிரூட்ட நோர்வே மீண்டும் பாடுபடுமென நோர்வேத் தரப்பு சமாதான ஏற்பாட்டாளர் எரிக் சோல்ஹெய்ம் பிபிசிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்

உ-5

## திருக்குறள் மனனப்போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்டப் பாடசாலைகளுக் கிடையில்நேற்று முன்தினம் நடைபெற்ற திருக்குறள் மனனப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதலாம் இடம்-
செல்வன் சந்தானகுமாரன் சத்திபாலன் யாழ். கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.

இரண்டாம்இடம்-
செல்வி கமலநாதன் நிரோபிகா யாழ். மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி

முன்றாம் இடம்-
விசுவகேதுகோகுலன்யாழ். சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.

நான்காம் இடம்-
செல்வி சந்தானகுமாரன் சத்திதாயினி யாழ் .கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

ஐந்தாம் இடம்-
செல்வன் ஸ்ரீவிஜயகாந் ஜதுர்சன் யாழ்.தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை

இவர்களுக்கான சான்றிதழ்கள உடுவில் கோட்ட உதவிப் பணிப்பாளர் அ தற்பரானந்தனால் இராமநாதன் கல்லூரி மண்டபத தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன. (உ-2)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்படையினருடன் இடம் பெற்ற மோதலின் போது மேலும் மூவர் உயிரிழந்துள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

- மயூரி [செல்லையா செல்வமாலினி யாழ்ப்பாணம்]
- சுடர்வாணன் [அன்ரன் தேவதாஸ் பற்றீமாராணி யாழ்ப்பாணம்]
- அறிவழகன் [தேவதாஸ் அன்ரன் திவாகர் முல்லைத்தீவு] ஆகியோரே உயிரிழந்தவர்களாவர் [ம]

## 2000ம் ஆண்டில் மட்டும் 52பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம் ஊடகவியலாளர்மயில்வாகனம்நிமலராஜன் உட்பட கடந்த வருடத்தில் மட்டும்உலகில் 52பத்திரிகையாளர்களும் ஊடகத்துறை ஊழியர்களும் கொல்லப்பட்டுள்ளதாக உலக செய்தித்தாள் அமைப்பு ஒன்றுதகவல் வெளியிட்டுள்ளது. பிரேசிலில் ஒருவரும், கொலம்பியாவில்10பேரும், கொங்கோ, சாம்பியா, கோர்கிஸா, குவாத்தமால, கொசோவோ, லெபனான், மொசாம்பிக், பெரு, சோவாலியா, தென்னாபிரிக்கா, உக்ரேன்,

இலங்கை.ஸ்பெயின், உருகுவே, அமெரிக்கா, போன்ற நாடுகளில் தலாஒருபத்திரிகையாளரும் இந்தியா, பாகிஸ்தான், ஹெயிட்டி.பில்லைன்ஸ், ஸியாரராயலியோன் போன்றநாடுகளில் தலா மூன்று பத்திரிகையாளரும் மெச்சிக்கோவில் இருவரும்ரஷ்சியாவில் 5பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை இவ்வருடம்பெப்ரவரிமாதம்வரை இந்தோனேசியா மெக்சிக்கோபராகுவே. ஆகிய நாடுகளில் தலா ஒருபத்திரிகையாளரும்பிலிப்பைன்சில் இருபத்திரிகையாளரும் கொல்லப்பட்டுள்ளனர்.

(ம)

### ஜெயலலிதாவின்
# வேட்புமனு நிராகரிப்பு கட்சியின்
# வெற்றிவாய்ப்பை அதிகரிக்கும்
## அரசியல் அவதானிகள் கருத்து

(சென்னை)

செல்வி ஜெயலலிதாவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதால் அ இ தி மு.க வின் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கப்பட வாய்ப்புள்ளது என அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

ஊழல் குற்றச்சாட்டு உட்பட பாரிய பல குற்றச்சாட்டுகளுக்குட்பட்டுதன்பெயருக்கு இழுக்குத் தேடிக் கொண்ட ஜெயலலிதாவின் கூட்டணி வெற்றி பெற்று அவர் முதலமைச்சராக வருவதை விரும்பாதஎத்தனையோ அ.இ.தி. மு.க ஆதரவாளர்கள் எதிரணிக்கு ஆதரவு கொடுப்பதை ஆய்வுகள் காட்டியுள்ளன;

அ.இ.அதி.மு.கவின்கொள்கையினை வரவேற்ற எத்தனையோ பேர் அது 'ஜெயலலிதாவின் தலைமையில் இருப்பது ஒரு குறைபாடு என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தநிலையில்ஜெயலலிதாவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதால் அ இ அ.தி மு க விற்கான ஆதரவு கூடலாம் எனவும் அத்துடன் அனுதாப வாக்குகள் கிடைக்கவும் வாய்ப்புள்ளது எனவும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-9)

### வெளிநாட்டவர்களுக்கு
# புகலிடம் வழங்கும் விடயத்தில் இறுக்கமான நடைமுறை

[ரோம்]

இத்தாலியில் அரசியல் தஞ்சம் கோரும் வெளிநாட்டவர்களுக்கு புகலிடம் கொடுக்கப்படுவதில்லையென்று இத்தாலிய கரையோரக் குடியமர்வு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சட்டவிரோத குடியேற்றவாசிகள் மீட்பு தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பில், அவர் குறிப்பிடுகையில் இத்தாலியில் அரசியல் தஞ்சம் கோரியவர்கள் குடும்ப அங்கத்தவர்களைஇத்தாலிக்கு அழைக்காவிட்டால் திருப்பி அனுப்பப்படுவார்களென்றும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த சில மாதங்களாகச் சட்டவிரோத குடியேற்றக்காரர் கூடிவருவதாகவும் இது கட்டுப்படுத்த வேண்டிய விடயமென்றும் தெரிவித்தார். [து]

# யூனிசேவ் கோயித்திரியே ஜப்பானின் அடுத்த புதிய பிரதமர்

(ரோக்கியோ)

ஜப்பானின் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் புதிய தலைவராக யூனிசேவ் கோயித்திரி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கட்சித் தலைவரே நாட்டின் பிரதமராக வேண்டும் என்ற கோட்பாட்டின் படி புதிய தலைவர் யூனிசேவ் கோயித்திரி சில நாட்களில் ஜப்பான் பிரதமராகப் பதவி ஏற்பார்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியும் வேலையில்லாத் திண்டாட்டமுமே கோயித்திரியை வெற்றியடையச் செய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

# கொலம்பியாவில் கடும் மோதல் இருபது கெரில்லாக்கள் பலி

(லண்டன்)

கொலம்பியாவின் சன்டான்டர் என்னுமிடத்தில் இடம் பெற்ற இராணுவத்தினருடனான மோதலின் போது 20 கெரில்லா இயக்கத்தவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரோந்து சென்ற இராணுவத்தினருக்கும் கெரிலாக்களுக்கும் இடையில் வெடித்த இப்பாரிய மோதலில் இராணுவத் தரப்பில் எவரும் கொல்லப்படவில்லையென இராணு அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி தாக்குதல் இராணுவத்தினருக்கு இவ் வருடம் கிடைத்த மிகப் பாரிய வெற்றியென கூறப்படுகிறது.

இதேவேளை, இராணுவத் தரப்பில் 10 பேரைதாம் கொன்று விட்டதாக கெரிலாக்கள் அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது; (உ-9)

# எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் 79 பேர் படுகாயம்

(ரொறன்ரோ)

கனடாவில் இடம் பெற்ற ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மாநாட்டிற்குஎதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்டமோதல்களில் 79 பேர் காயமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுள் 34 பேர் பொலிஸ் அதிகாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி ஆர்ப்பாட்டம் தொடர்பாக இதுவரை சுமார் 150 பேர்வரை கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.(உ-9)

## செய்திப்பரல்

★ சர்வதேசவிண்வெளி நிலையத்தில் விண்வெளிக் குழுவினருக்கான வசிப்பிடத்தை அமைப்பது தொடர்பான ஒப்பந்தத்தில் நாஸாவும், இத்தாலிய விண்வெளி நிறுவனமும் கையெழுத்திட்டுள்ளன.

★ நிக்கரகுவாவின் கரீபியன் கடற்கரைப் பகுதியில் கிளர்ச்சிக்காரரின் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் இறந்துள்ளனர்.

★ 1989-1999 ஆண்டு காலப் பகுதிக்குள் அவுஸ்திரேலியப் பெண்ணொருவர் தனது நான்கு குழந்தைகளைக் கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வேட்பு மனு நிராகரிப்புக்கு கலைஞரே காரணம் ஜெயலலிதா குற்றச்சாட்டு

(சென்னை)

அ.இ.அ.தி.மு.கபொதுச் செயலர் செல்வி ஜெயலலிதாவின் வேட்புமனு நிராகரிக்கப்பட தி மு.க தலைவர்கருணாநிதியே காரணம் என ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

சிவகாசி மாவட்டத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றிய போதே ஜெயலிதா இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், ஜெயலலிதாவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. அ.இ.அ.தி.மு.க கூட்டணியின் வெற்றி வாய்ப்பில் எந்தவிதப்பாதிப்பையும் ஏற்படுத்தாது என இளங்கோவன் தெரிவித்துள்ளார். அத்துடன், சி.பி.ஐ.இன் மாநிலச் செயலர் நல்லகண்ணுவும் இதே கருத்தைக் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது; (உ-9)

### சர்வதேச நாணய
# நிதியத்திற்கு எதிராக இந்தோவில் ஆர்ப்பாட்டம்

(ஜகார்த்தா)

சர்வதேச நாணய நிதியத்துக்கு எதிராக இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் பெரியளவிலான ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த திங்களன்று நடைபெற்ற மேற்படி ஆர்ப்பாட்டத்தில் நாணய நிதியத்திற்கெதிரான சுலோக அட்டைகளுடன்கோஷங்களைஎழுப்பி பெரும் திரளானவர்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர். (உ-9)

### அமெரிக்க ஜனாதிபதியுடன்
# இஸ்ரேல்- பலஸ்தீன விவகாரம் குறித்து பேச்சு

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச்டபிள்யூபுஷ். மற்றும் இராஜாங்க அமைச்சர் கொலின்பவுல் ஆகியோருடன் அடுத்தவாரம் இஸ்ரேல் பேச்சு நடத்தவுள்ளது.

நான்கு நாள் விஜயமொன்றை வாஷிங்டனுக்கு மேற்கொள்ளவுள்ள இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் கடந்த இரு வாரங்களாக இஸ்ரேலுக்கும்,பலஸ்தீனத்திற்கும் இடையில் அதிகரித்து வரும் வன்முறை குறித்து பேசவுள்ளதாக அமெரிக்க செய்தி ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (உ-7)

### பொருளாதார தடையால்
# ஈராக்கில் இதுவரை ஒரு கோடி மக்கள் பலி

(பக்தாத்)

ஐக்கிய நாடுகள் சபைநடைமுறைப்படுத்தி வரும் பொருளாதாரத் தடையையடுத்து ஈராக்கில் பல விதமான நோய்கள் பரவிவருகின்றது.

இப்பொருளாதாரத் தடைகாரணமாக 10 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளதாக ஈராக் கண்டித்துள்ளது.

வயிற்றோட்டம், இருதய நோய் போன்றவற்றினால் சிறுவர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றுஐக்கிய நாடுகள் சபைமீது ஈராக் அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

1996 தொடக்கம் ஐக்கிய நாடுகள் சபை நடை முறைப்படுத்திய பொருளாதாரத் தடைகாரணமாக ஒரு கோடியே4இலட்சத்து 85 ஆயிரத்து 162 பேர் பலியாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

### பள்ளிவாசல்
# இடிந்து வீழ்ந்ததில் பாலகர் உட்பட பலர் பலி

(லாகோஸ்)

நைஜீரியாவில்உள்ள லாகோஸ் பள்ளிவாசல் இடிந்து வீழ்ந்ததில் 6 பேர் பலியாகியுள்ளனர்.

கடும்மழை காரணமாகவே இப் பள்ளிவாசல் இடிந்து வீழ்ந்ததாக கூறப்படுகிறது.

இறந்தவர்களுள் 4 பேர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

உலக தரிசனம் அறிவுப் போட்டி 9 இல்
வெற்றிபெறுபவர்களுக்கு பரிசில் வழங்குபவர்கள்
மிக்ஷர், பகோடா, மஸ்கற் மற்றும் சுவைப் பண்டங்கள் தயாரிப்பாளர்களான
சாரிபாத் மிக்ஷர்
279 பலாலி வீதி, திருநெல்வேலி.

# தொண்டர் நேர்முகத் தேர்வு வேலணையில் வெள்ளியன்று

(யாழ்ப்பாணம்)

வேலணைபிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்த அபிவிருத்தி தொண்டர்களுக்கான நேர்முகப் பரீட்சை வேலணை பிரதேச செயலகத்தில் நாளை வெள்ளிக்கிழமை 9.30 மணிக்கும்,

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் பதிவு செய்தவர்களுக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை 9.30 மணிக்கும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் என ஈ.பி.டி.பி.யின் தீவக காரியாலயம்அறிவித்துள்ளது. (உ-3)

# நீர் இறைக்கும் இயந்திரம் அன்பளிப்பு

(சுழிபுரம்)

போரூட் நிறுவனம் 61 ஆயிரம்ரூபா செலவில் சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயத்திற்கு புதியநீர்இறைக்கும் இயந்திரம் ஒன்றினை வழங்கியுள்ளதுடன்,

தண்ணீ தாங்கி ஒன்றையும் அமைத்து வருகிறது. (10உ-ப)

அ.அட்டையை

பெறுக

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 26, ஐயா மாவத்தை கொழும்பு- 4 ஐ வதிவிடமாகவும் கொண்ட சேவியர் ஜோசவ் என்பவரது தேசிய அடையாள அட்டை யா/சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் இருப்பதாகவும், உடனடியாக வந்து பெற்றுக் கொள்ளுமாறும் சிவில் நிர்வாக அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர் (உ)

முறைகோடிமன்னவன்செய்
யின் உறை கோடி
ஒல்லாது வானம்பெயல்.

குறள்

# வலம்புரி

## அவசர மாநாடு எதற்கு?

விடுதலைப் புலிகளால் கடந்த நான்கு மாதங்களாகக் கடைப்பிடிக்கப் பட்டு வந்த யுத்த நிறுத்தம் முடிவுக்கு வந்ததை அடுத்து யுத்தமேகம் இலங்கையில் சூழ்ந்து விட்டது. புலிகளின் யுத்த நிறுத்தத்திற்குப் பதிலாக தாம் யுத்த நிறுத்தம் செய்ய முடியாதென அறிவித்த அரசு, புலிகள் யுத்த நிறுத்தத்தை வாபஸ் பெற்றவுடன் அவசர அவசரமாக முப்படைத் தளபதிகளும் கூடி நிலைமைகளை ஆராய்ந்துள்ளனர்.

புலிகள் யுத்த நிறுத்தம் செய்த போது பதிலாக யுத்த நிறுத்தம் செய்ய மாட்டோம் என அரசு அறிவித்திருந்தது. அதாவது எந்நேரமும் போருக்குத் தயார்என்பதே அதன் உட்பொருள்.

ஆனால் விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை நீடிக்க மாட்டார்கள் என்றவுடன் முப்படைகளும் கூடி ஆராய்ந்தனர்.

புலிகளும் அரசும் யுத்த நிறுத்தம் செய்து அதில் புலிகள் யுத்த நிறுத்தத்தை வாபஸ் பெற்றிருந்தால் முப்படைகளும் அவசரமாகக் கூடி நிலைமையை ஆராய்வது ஏற்புடையது. மாறாக தமதுபோர் முனையில் எந்தவிதமான குறைப்பையும் மேற்கொள்ளாத படையினர், புலிகளின் ஒரு தலைப் பட்சமான யுத்த நிறுத்தம் நீடிக்கப்படாததை அடுத்து அவசரமாகக் கூடி ஆராய்வதாயின், புலிகளின் அறிக்கைக்கு இருக்கும் கனதி எத்துணை வல்லமை பொருந்திய தென்பதை சர்வ தேசம்எளிதில் புரிந்து கொள்ளும்.

இனப்பிரச்சினையை எப்பாடுபட்டாவது தீர்த்து வைக்க வேண்டுமென அரசாங்கம் உளப்பூர்வமாக எண்ணியிருந்தால், புலிகள் தாமாகவே முன்வந்து யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்த போது பதிலுக்கு அரசும் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்திருக்கவேண்டும். அதனை விடுத்து நாட்டிற்குச் சமாதானம் வேண்டும். ஆனால் அச் சமாதானம் இப்படித்தான் ஏற்படவேண்டும் என அரசு கருதினால் அது அழிவையே தரும்.

எந்தப் பக்கத்திலாவது சமாதானம் ஏற்பட்டால் போதுமென்ற சிந்தையுடன் செயற்பட்டால் மட்டுமே இலங்கையில் சண்டைக்குப் பிரியாவிடை வழங்க முடியும்.

# உரிமைகளை எள்ளளவும் விட்டுக்கொடுக்காது உறுதியுடன் பணிபுரிந்த உத்தமர் "செல்வா"

இன்று 'தந்தை செல்வா' நினைவு தினத்தை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது. (ஆ-ர்)

தமிழ் மக்களின் வரலாற்றில் மிக முக்கியமான கால கட்டத்தில், தந்தை செல்வாவும் தளபதிகளும் மாறி மாறி வந்த அரசுகளை எதிர்த்து, தமது எதிர்ப்பை மக்கள் மத்தியில் வலுக்கொள்ளச் செய்து, தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக வடகிழக்குத் தாயகத்தில் உரிமை பெற்று வாழத் தகுதியுடையவர்களாக ஆக்கும் கைங்கரியத்தைச் செய்தனர்: இவர்கள் அற்ப சொற்ப சலுகைகளுக்காகத் தந்தையின் இலட்சியத்தை விலை பேசியிருந்தால் தமிழர் பிரச்சினை இன்றும் பிரச்சினையாகவே இருந்திருக்கவே முடியாது. தமிழ்த் தேசியம் பற்றியோ தமிழர் தாயகம் பற்றியோ, சுயநிர்ணய உரிமை பற்றியோ நாம் பேசுவதற்கு வாய்ப்பு இருந்திருக்குமோ என்று கூட எண்ண வேண்டியிருக்கிறது. வடகிழக்கு மாகாணங்களில் கட்சியின் மாநாடுகளை மாறி மாறி நடத்தியதோடு வடக்கிலும், கிழக்கிலும் இருந்தே கட்சியின் தலைவர்களைத் தெரிவு செய்ததும் வடகிழக்குப் பிராந்தியமே தமிழரின் தாயகம் என்பதையும் உறுதி செய்தது:

### சமஷ்டி முடிபு

மாறி, மாறி வந்த அரசுகளுடன் 1957- 1965 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் தந்தையின் இலட்சியப் பயணத்தின் ஏணிப்படிகள்; ஆயினும் இவற்றில் குறிப்பாக 1957 இல் செய்யப்பட்ட தந்தை செல்வா- பண்டா ஒப்பந்தம் தந்தையினதும் தளபதிகளினதும் சட்டத்துறையின் நிபுணத்துவத்திற்குச் சிறந்த உரைகல்லாகும். இது ஒப்பேறி இருந்தால் சமஷ்டி ஆட்சி முடிந்த முடிவாயிருக்கும். தந்தையும் தளபதிகளும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது ஆட்சியைத் தக்க வைப்பதற்காகச் சிங்களக்கட்சிகளால், இடதுசாரிகள் உட்படப் பலவிதமாக அணுகப்பட்ட போதும் இவர்கள் ஒருபோதும் தமது இலட்சியத்தை விலை பேசவில்லை: தந்தையின் இயக்கத்திற்கு ஒப்பந்தங்களால் கிடைத்த தோல்வி தமிழ் மக்கள் இந்நாட்டில் உரிமையுடன் வாழ்வதானால் போராடியே அதனைப்பெறலாம் என்பதைத் துலாம்பரப்படுத்தின. இவர்களின் சாத்வீகப் போராட்டத்தின் தோல்வியினால் ஏற்பட்ட மற்றொரு பரிணாமமே இன்றைய ஆயுதப் போராட்டமாகும்;



### தனிச்சிங்களம்

இதனால் ஈழத் தமிழரின் வரலாற்றின் ஒரு கால கட்டத்தில் தந்தையும், தளபதிகளும் மிக்க காத்திரமான பங்கினை வகித்திருக்கிறார்கள் என்றால் மிகையாகாது. இவர்கள் அன்று தனிச் சிங்களச் சட்டத்திற்குக் காட்டிய எதிர்ப்பே பண்டாரநாயக்கா அரசையும், டட்லிசேனநாயக்க அரசையும் தமிழ்மொழி விசேட மசோதாக்களுக்கு வழிவகுத்தது. இவ் எதிர்ப்பின் பெறுபேறு தான் 1944 இல் சட்ட நிரூபண சபையில் தனிச் சிங்களத்தை முன்மொழிந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை தமது காலத்திலேயே தமிழ் சிங்கள மொழிகளை நாட்டின் அரசகரும மொழிகளாக ஏற்க வைத்தது. இன்று அரச வாகனங்களில் சிங்கள ஸ்ரீ இலக்கம் மறைந்து விட்டது. பாராளுமன்றத்திலும் வெளியிலும் மேற்கொண்ட நடவடிக்கைகள் தமிழர் தாயகத்தின் அவசியத்தை உணர்த்தின. தென்இலங்கை அரசியல் வாதிகளையும் ஏற்க வைத்துள்ளது: 1957, 1965 ஒப்பந்தங்கள் இதனை உறுதி செய்தன. மலைநாட்டுத் தமிழர் இன்று நாடற்றவர்களாக இல்லை. முஸ்லிம் மக்களையும் தமிழ் பேசும் மக்கள் வரிசையில் இணைத்தது:

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**
தலைவர், வரலாற்றுத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

### தனித்துவம் காத்தமை

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது தந்தை செல்வா தமிழ்த் தலைவர்களில் ஓர் ஒப்பற்ற இடத்தினை வகிக்கிறார் எனலாம். இதற்கு அவரது தனிப்பட்ட குணாதிசயங்கள் மட்டுமன்றி அவரின் தீர்க்க தரிசனமிக்க சிந்தனையும் அவரோடு இணைந்து கொண்ட தளபதிகளின் திபாகமும் இலட்சியப் பற்றுமேயாகும். 1956 இல் நாட்டை உலுக்கிய சிங்கள பௌத்த பேரினவாதத்தில் சிக்கியும் ஆளும் கட்சிகளதும், இடதுசாரிகளினதும் இனிப்பான வார்த்தைகளிலும், வாக்குறுதிகளிலும் மயங்கித் தமிழ் மக்கள் தமது தனித்துவத்தை இழக்காது, கேடயமாக விளங்கிய காவலர்கள் இவர்கள் தான். பிராந்திய வேறுபாடுகளையும், சமூகப் பிரிவினையையும் பயன்படுத்தி அரசியல் இலாபம் தேடிச் செல்ல வந்தவர்களுக்கும்பதிலடி கொடுத்தவர்களும் இவர்கள் தான்.

### கோட்பாடுகள் மறையவில்லை

தமிழ் பேசும் மக்கள், தமிழ்த்தேசிய இனம் மரபுவழித்தாயகம், சுய நிர்ணய உரிமை ஆகியபதங்களை இந்நாட்டு அரசியலில் புகுத்திய தோடு மட்டும் நின்றுவிடாது அந்த இலட்சியத்திற்காக உழைத்தவர்களும் இவர்களே. தென் இலங்கை அரசியல் கட்சிகள் தந்தையின் மரணத்தோடு, மேற்கூறிய கோட்பாடுகளும் மறைந்து விடும் என எண்ணின. மாறாக இக்கோட்பாடுகளுக்கு உறுதியான அத்திவாரமிட்டு, அடுத்த சந்ததியினரிடம் இதனைப் பகதுவமாகக் கையளித்த பெருமையும் தந்தைக்கும் தளபதிகளுக்கும் உண்டு. இவர்கள் காலத்தில் இவர்களுடன் இணைந்தவர்கள் தான் மட்டுநகர் காசி ஆனந்தனும், வண்ணை ஆனந்தனும், மாவை சேனாதிராசாவும் இன்றைய போராளித் தலைவர்களும் என்பதும் குறிப்பிடத்தக்கது

## சாயி அருளமுதம்



மற்றவர்களுடையஇன்ப துன்பங்களில் பங்கேற்க நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் உங்களிலும்கூடிய மகிழ்ச்சியாயிருக்கும் போதோ, பரீட்சைகளில் சிறப்புச் சித்தி அல்லது பரிசுகள் பெறும் பொழுதோ, அதைக்கண்டு பொறாமை கொள்ளாதீர்கள். அவர்களது ஊக்கத்தை வெல்ல முயலுங்கள். கூடிய புத்தியும். கூர்மையான ஞாபக சக்தியும் வேண்டுமெனப் பிரார்த்தியுங்கள்; ஆனால் இதயத்தில் பொறாமையும் வன்மமும் ஏற்பட இடமளிக்காதீர்கள்; அழுக்காறு ஒரு மிகக் கொடிய விஷமாகும்; அது ஒழுக்கத்தை மாசுபடுத்தி, ஆரோக்கியத்தைக் கெடுத்து உங்களிடமிருந்து சாந்தியைப் பறித்து விடும். பொறாமையால்பாதிக்கப் படாத அனசூயைகளாக நீங்கள் இருப்பின், படைத்தல், காத்தல், அழித்தல் தெய்வங்களையே அடக்கி விட முடியும்; வளரும் பயிர்களை நாசம் செய்யும் தொற்றுப் பூச்சிகள் போல, பொறாமையானது கபடமாக உள்நுழைந்து விரைவில் எங்கும் பரவி விடும். ஆகவே, அற்ப விஷயங்களிற் கூடப் பொறாமைக்கு இரையாகாது நீங்கள்மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்;

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## போதியளவு தே.அ.அ. விண்ணப்ப படிவங்கள் கையிருப்பில்

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டைக்குரிய விண்ணப்பப் படிவங்கள போதியளவு கையிருப்பில் உள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

அண்மைக்காலமாக இவ் விண்ணப்பப் படிவங்களுக்கு தட்டுப்பாடுநிலவியதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் இவ்விண்ணப்பப் படிவங்கள் நீண்டகாலமாகப் பாவனைக்கு போதுமானவையன்றுஎனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-20)

## கைகலப்பு சம்பவங்களில் ஐவர் படுகாயம்

(மந்திகை)

வடமராட்சியின் பல பாகங்களிலும், உறவினர்களுடன் ஏற்பட்ட கைகலப்பு சம்பவங்களில் காயமடைந்த ஐவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்;

கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவங்களில் வாள்வெட்டு கத்திக்குத்து, தடியடிஎன்பவற்றுக்கு இலக்காகிய நிலையில்,

பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவில் இடம்பெற்ற சம்பவத்தில் யூட் பிரான்சிஸ் (வயது 24);

துன்னாலை செங்குந்தான் பகுதியில் இடம்பெற்ற கைகலப்பில் சிவசுப்பிரமணியம் சுதாபதி (வயது 21).

துன்னாலை யாக்கருவில் இடம்பெற்ற கைகலப்பில் ஆறுமுகம் தங்கராணி, செல்லையா இராமநாதன்.

கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் இடம்பெயர்ந்தோர் முகாமில் இடம்பெற்ற சம்பவத்தில்முருகையாகதவநாதன் [வயது 53] ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்; (உ-23)

தங்க நகை உலகில்
மங்காப் புகழ் பெற்ற
தங்க ஆபரணங்களின்
சாம்ராஜ்யம்
**மகாநதி ஜுவல்லறி**
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1871)

# புலிகளுடன் பேசித்தீர்வு காண்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது

## கல்விஅமைச்சர் சென்னையில் தெரிவிப்பு

(சென்னை)
இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் சமாதானம் பேசிஅரசியல் தீர்வுகாண்பதில் இலங்கைஅரசு உறுதியாக உள்ளதென்றும் இராணுவரீதியாக தீர்வுகாண முடியாதென்றும் உயர்கல்வி மற்றும் தகவல்தொழில்நுட்ப அமைச்சர் இந்திக்ககுணவர்த்தனா நேற்றுசென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது தெரிவித்துள்ளார்:

அங்குஅவர் மேலும் பேசுகையில் கூறியதாவது ,கடந்த வருடம் விடுதலைப்புலிகள் கிறிஸ்மஸ்தினத்தில் இருந்து கடைப்பிடித்துவந்த ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை விலக்கிக் கொள்வதாக தற்போது அவர்கள் அறிவித்திருப்பது புதிதான தொன்றல்ல இனப்பிரச்சினைக்கான தீர்வில் நோர்வே நாட்டின் அனைத்துநடவடிக்கைகளையும் இந்தியா!வரவேற்றுள்ளது.

இலங்கையின் வடக்கு கிழக்குப்பகுதிகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்க வகைசெய்யும் கூட்டாட்சி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தமுயலும் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சியானஐ.தே.கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கிறது என்றும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். [வ]

# தந்தை செல்வாவின் 24வது சிரார்த்த தினம்

(தென்மராட்சி)
தந்தை செல்வாவின் 24ஆவது சிரார்த்ததின வைபவம் இன்று காலை 9 மணிக்கு தந்தை செல்வா நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

தந்தை செல்வா நினைவு தேசிய அவையும், தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவும் இணைந்துநடாத்தும் இவ் வைபவத்தில் மதப் பெரியார்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ். நகர முதல்வர். உள்ளூராட்சிஉறுப்பின கள் உட்படவேறும்பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று காலை 11மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தி கடந்த எட்டு வருடங்களா.ச் செயற்படாமல் இருந்து வருகின்ற தந்தை செலவா நினைவு அறங்காவல் குழுவின் புனரமைப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் மேதகு. எஸ். ஜெபநேசன், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவை சேனாதிராஜா, எஸ். சிவமகாராஜா, பேராசிரியர் சி. க. சிற்றம்பலம், எம். கே. ஜீவகதாஸ், வீ.ஜீ. தங்கவேல், எஸ். குலநாயகம், பெ. கனகசபாபதி ஆகியோர் கலந்துகொள்வர்எனத்தெரிய வருகின்றது. (வ- 77)

### கொழும்பு மாகர்

அங்கு ள பக்கள் மத்தியில் பதற்றம் நிலவியதாகவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை மோதலின் போது கொல்லப்பட்ட இராணுவத்தினர்களின் சடலங்களும் கொழும்புக்குஎடுத்துவரபட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

### ஆட்சியை-..

சிரியர் அ. சண்முகதாஸ் தமது உரையில் தந்தை செல்வா ஒரு அரசியல்வாதி என்பதிலும் பார்க்க ஆன்மீகவாதி எனக் குறிப்பிடுவதே சாலப் பொருத்தமானது. ஏனெனில் அவர் ஈழத்துக் காந்தியாக தமிழ் மக்களின் தந்தையாக விளங்கியவர். உலக தேசியத் தலைவர்களின் பட்டியலில் இந்த நூற்றாண்டுத் தலைவராக தந்தை செல்வாஇடம் பெறுவார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழர் விடுதலைக்கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் கலந்து கொண்டார். (இ-06)

# பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)
யாழ் பல்கலைக்கழக வெளிநிலைத் தேர்வு 1998 கல்வியாண்டு கலைமாணி இறுதிப் பரீட்சை முடிவுகள் நேற்றைய தினம் வெளியிடப்பட்டுள்ளன 153 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாகவும் மாணவர்கள் வெளிநிலை பரீட்சை அலகினருடன் தொடர்பு கொண்டு பரீட்சை முடிவுகளைப் பார்வையிட முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-6)

### கொழும்புகுண்டு -

கோட்டைப்பகுதிகளில் பொலிஸாரால்தீவிர தேடுதல் நடத்தப்பட்டது. இதன் போது பெருமளவானவர்கள் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (இ)

### கொழும்பு -.

லும் பலத்த தேடுதல் நட.வடிக்கைகளை படையினர் மேற் கொண்டிருந்தனர்.

இக் குண்டுத் தாக்குதல் நடைபெற்றதையடுத்துதலைநகரில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது இவ்வாறிருக்க இக் கட்டடப்பகுதியில்குண்டுசெயலிழக்கச் செய்யும் பிரிவினர் நேற்று பிற்பகல் மேற் கொண்ட தேடுதலின் போது குண்டொன்றும் சயனைற்குப்பியும் சேட்டொன்றும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது கொழும்பு பொலிஸ் வட்டரங்கள் தெரிவித்துள்ளன.

குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்துக்கு ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள இடத்துக்குமிடையில் 50மீற்றர் தூரவேறுபாடு காணப்படுவதும் இங்குகுறிப்பிடத்தக்கது. (இ)

### படையினரிடம் . :

எடுப்பில் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சிகளை நவீன ரக ஆயுதங்கள் கொண்டு முறியடிக்க முற்பட்ட விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும்இடையேகடுஞ் சமர் வெடித்தது.

இராணுவத்தினரின் இத் தாக்குதல நடவடிக்கைகு உதவியாகவிமானப்படையினரின் ''மிக்'', ''கிபிர்'' குண்டு வீச்சு விமானங்களும, பீரங்கி பொருத்திய ஹெலிகளும் விமானத்தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

அதேவேளை கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் களையும் மேற்கொண்டிருந்தனர்.

இராணுவத்தினர் பீரங்கித் தாக்குதல்களிலும், சரமாரியான எறிகணைத் தாக்குதல் களிலும், பல்குழல் பீரங்கித் தாக்குதல்களிலும் ஈடுபட்டிருந்தனர்.

இராணுவத்தினரின் மும்முனைத் தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகள் ஈடுகொடுத்து இராணுவத்தினருக்குப் பலத் சேதத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

அக்கினிச் சுவாலை 1 இராணுவநடவடிக்கை தொடர்ந்து நடை பெறுவதாக பிரிகேடியர் சனத்கருணாரத்தினா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இம்மோதல்களின் போது விடுதலைப் புலிகள்தரப்பில் 75பேர்வரை உயிரிழந்திருக்கலாம் என்றும் சுமார் 300 பேருக்கு மேல் காய மடைந்துள்ள தாகவும் புலிகளின் சம்பாசனையில் இருந்து அறிய வந்துள்ளதாக ஊடக தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (வ)

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
**நியூ ராதிகாஸ் நகை மாளிகை**
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1872)

### ஊழியர் - . -

இதேவேளை படையினரின் மேற்படி நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து துறைமுக ஊழியர்கள் நேற்று காலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனால் கப்பலில் இருந்து பொருட்களைஇறக்க முடியாதளவிற்கு துறைமுகப் பணிகள் ஸ்தம்பிதமடைந்தன [இ]

### வன்னி - - -

பியாணி பெர்னாண்டோ,குருநாகல் ஆயர் தேமன்பீலிஸ், திருமலைமட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மன்னார் ஆயர் இராயப்பு யோசப் பதுளைஆயர் வின்சன்றபெர்னாண்டோ, கொழும்பு துணைஆயர் மேரியூட்பீரிஸ் செடக்நிறுவன இயக்குனர் ரீ.பி தேவராஜ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

தமிழீழஅரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின் போது யுத்தநிறுத்தம் பேச்சுவார்த்தை தொடர்பாக ஆயர்கள் உரையாடியிருக்கலாம் எனசெய்திகள் தெரிவிக்கின்றன. (ம)

[மற்றொருசெய்தி5ம்பக்கத்தில்)

மற்றுமொரு அரியசந்தர்ப்பம்.. தவறவிடாதீர்கள்!

வடபிராந்திய சத்தியசாயி சேவா
நிறுவனங்களின் இணைப்புக்குழுவின்
இளைஞர்சபை நடத்தும்

**மனிதமேம்பாடுகள் ஊடாக ஆன்மீகம் கண்காட்சி**

அன்பில்லா கடமை இழிவானது
அன்புடன் கடமை விருபபத்தக்கது
கடமையில்லா அன்பு தெய்வீகமானது
-பாபா

இடம்: மானிப்பாய் மகளிர் கல்லூரி
காலம்: 29 — 04 — 2001 ஞாயிறு
30 — 04 — 2001 திங்கள்
காலை 9.00 மணி — மாலை 4.30 மணி

(பிரவேசம் இலவசம்)

மனித மேம்பாட்டின் அவசியத்தையும் ஆன்மீக விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் இக்கண்காட்சிக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இளைஞர் சபை**
வடபிராந்திய சத்தியசாயி சேவா
நிறுவனங்களின் இணைப்புக்குழு

(கி-1881)

**தவறி விட்டது**
சித்தன் கேணி சிவன் கோவிலடியைச் சேர்ந்த சின்னத்துரை துரைசிங்கம் என்வரது விசேட அடையாள அட்டை வைத்தீஸ்வராச்சந்தியில் தொலைந்து விட்டது கண்டெடுத்தவர்கள் வலம்புரிக் காரியாலயத்தில்ஒப்படைக்கவும்.
(.2950)

**ஒத்துழைத்தவர்த்தகர்கட்கு உளமார்ந்த நன்றிகள்**

வர்த்தகர் நலன்விரும்பிகளாகிய எங்களின் அன்பான வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து ஞாயிற்றுக்கிழமை வர்த்தகநிலையங்களை மூடி ஒத்துழைப்பு நல்கிய அனைத்து வர்த்தகப் பெருமக்களுக்கும் எம்நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம். அதேநேரம் ஆஸ்பத்திரி வீதி,மின்சாரநிலையவீதி, கஸ்தூரியார்வீதி போன்ற வீதிகளில் சொற்ப எண்ணிக்கையான மிகச்சிலர் தமது வர்த்தக நிலையங்களைத் திறந்துவியாபாரம் செய்தது எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு எமக்கு வேதனையைத் தந்ததும்உண்டு ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு நம்மில் ஒற்றுமைநீங்கின் அனைவர்க்கும் தாழ்வு என்பதனைக் கருத்திற் கொண்டு நாமாகவே எமதுவர்த்தக நிலையங்களை விடுமுறை நாட்களில் முடிவைப்போம் என்று இன்றேஉறுதிஎடுத்துக் கொள்வோமாக.

விடுமுறைநாள் உழைப்பதனை விட்டிடுவோம்
வேற்றுமைகள் களைந்தொன்றாய்ப் பூட்டிடுவோம்

வர்த்தகர்கள், நலன்விரும்பிகள்
யாழ்ப்பாணம்.

## பிரிவுத் துயர் பகிர்வு

மிருசுவில் பழையவாய்க்காலடியைச் சேர்ந்தமரியான் யேசுதாஸன் நேற்று அகால மரணமானார்.

தகவல்
சுமதி
தும்பளை தெற்கு,
பருத்தித்துறை.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளார்தெரு, யாழ்ப்பாணம்எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவரது அச்சகத்தில் 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது